COS No.18/2022

PW-1 -சண்முகநாதன்

த/பெ.

நாள். 01.09.2025.

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>

1.வாதி நிறுவனமும் ஸ்ரீதேவி கெமிக்கல்ஸ் என்ற நிறுவனமும் வெவ்வேறு பெயர் கொண்டவைகளாக இருந்த போதிலும் இந்த விபரத்தை பிரதிவாதிகளுக்கு அறிவிப்பின் மூலம் சொல்லி இருக்கிறேனா என்று கேட்டால் சொல்லி இருக்கிறேன். இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கும் இன்வாய்கள் சரக்கு வாங்கியதற்காக பிரதிவாதிகள் கொடுத்தவை தான். பொதுவாக டெலிவரி கொடுக்கும்போது டெலிவரி சாலனை கையெழுத்து போட்டு வாங்குவது வழக்கம் அதனை பிரதிவாதி நிறுவனம் சரியாக செய்கிறார்கள் என்று பார்த்துக் கொள்வோம்.

2.பிரதிவாதிக்கு சரக்குகளை அனுப்பியதற்கான டெலிவரி செல்லான இந்த நீதிமன்றத்தில் ஆவணப்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் பரிவார்த்தனை உண்மையில் பரிவர்த்தனை நடந்திருந்தால் டெலிவரி செலான் கொடுத்திருப்போம் என்றும் உண்மையில் எந்த பரிவர்த்தனையும் இல்லாத போது டெலிவரி செல்லான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி நிறுவனம் நாங்கள் கொடுத்த சரக்குகள் தரமற்றவையாக இருந்தது என்று சொல்லுகிறார்கள் என்று சொன்னால் அது தவறான தகவல்.

3.பிரதிவாதி நிறுவனம் கேட்ட சரக்குகளில் தரமற்றவையாக இருந்தன என்று சொன்னால் கேட்டவை கொடுக்கப்பட்டது தரமற்றவையாக இருந்தன என்று பிரதிவாதி எந்த பொழுதிலும் சொல்லவில்லை. பிரதிவாதி நிறுவனத்திற்கு நாங்கள் கொடுத்த சரக்குகள் எல்லாம் தரமற்றவையாக இருந்தன என்றும் தற்போது பிரதிவாதி நிறுவனத்திடம் இருந்து மோசடியாக பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் இந்த பொய் வழக்கு தாக்கல்

செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பொய்யான சங்கதிகளை வைத்து இந்த வாழ்க்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V.SREE VIDYA

DN: cn=V.SREE VIDYA, ou=Judicial Officer, o=Principal Subordinate Judge,, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.